**ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை கம்பனியால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தளாய் செயற்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அணை நிர்மாணிப்பதற்காக சேகரிக்கப்பட்ட தொகையினை விட கம்பனியால் முன்னைய ஆண்டில் ரூபா 16,235,670 தொகை மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 4,319,176 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 20,554,846 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி செலவினமாக கணக்கீடு செய்யப்படாமல் ‘‘முற்பணம் கந்தளாய்’’ கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | கந்தளாய் மணல் செயற்திட்டம் இந்த ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு கருத்து தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன்போது சகல மணல் கியூப் அளவினையும் விற்பனை செய்ததன் பின்னர் பாதுகாப்பு வேலிக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் செலவினமாக இலாபத்திலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் மற்றும் செலவினங்கள் சரியான பிரகாரம் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த துடன் வருமானத்தை விட செலவினங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.19 பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கியரம் ரூபா 79,803,562 ஆன நடைமுறையல்லா சொத்துக்கள் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமதியை சமர்ப்பிப்பதற்காக சொத்துக்களில் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப் பெறுமதி என்பன மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இழிவுப் பெறுமதி மற்றும் நியாயமான பெறுமதிகளுக்கு இடையே போதியளவான தாக்கம் ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் சில எங்களால் இனங்காணப்பட்டுள்ளது. தற்போது சந்தைப் பெறுமதி உயர் சதவீதத்தில் மாற்றமடைந்துள்ளதா எனக் கவனத்தில் கொள்ளக்கூடிய மோட்டார் வாகனங்கள், இயந்திர உபகரணங்கள் மாத்திரம் மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இதன் போது நிலையான சொத்துக்களின் பெறுமதியை விட மேற்பட்ட தொகை மீள் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்காக செலவாகின்ற நிலையான சொத்துக்களை கவனத்தில் கொள்ளாமல் மேற்கூறப்பட்ட உயர்பெறுமதியுடைய மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை மாத்திரம் மீண்டும் மதிப்பீடு செய்யப்படும் செயற்பாடுகளுக்காக உரிய திட்ட முறைமையின் இடையே மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் மணல் செயற்திட்டங்களில் காணப்பட்ட மணல் மீதி பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாமல் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பௌதீக இருப்பு அந்தந்த பணிப்பொறுப்பு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தி எங்களுக்கு | இருப்புக்களை பௌதீக மெய்மையாய்வு செய்து இருப்புக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களில் காணப்பட்ட மீதியை அடிப்படையாகக் கொண்டு ஏஞ்சிய மணல் இருப்புக்களின் பெறுமதி ரூபா 12,123,460 ஆக கணக்குளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத செயற்திட்டங்களில் காண்பிக்கப்படுகின்ற இருப்பு மீதிகள் தொடர்பாக பணிப்பாளர் சபை கவனம் செலுத்தி எதிர்காலத்தில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | கம்பனிக்கு ரூபா 43,954,503 தொகை பொறியியல் சேவை வழங்கும் ஒப்பந்தம் கிடைத்திருந்தது. மீளாய்வாண்டில் அதில் ரூபா 13,198,351 தொகை கிடைத்திருந்ததுடன் இந்த தொகை முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்காக கம்பனியால் வேறொரு கம்பனிக்கு ரூபா 8,404,546 தொகையும் கம்பனியின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துச் செலவினம் மற்றும் சம்பளமாக ரூபா 1,745,004 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனியின் வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்காணாமல் இப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்திற்காக வரி விடுதலை (Tax Exemption) தொடர்பான விடயங்களை தீர்த்து வைத்தல் 2022 மார்ச் முதல் வரையும் காலந்தாழ்த்தப்பட்டிருந்ததுடன் அதற்கு முன்னர் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021.12.31 வரை கிடைத்த பண பெறுவனவுகள் முற்பணக் கணக்கிலும் அதுவரை செலவிடப்பட்ட செலவினம் நடப்பாண்டின் செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது கிடைத்த முற்பணத் தொகை வரிப் பிரச்சினைகளை தீர்த்து வைத்ததன் பின்னர் செயற்திட்ட பணிகளை பூர்த்தி செய்யும் கட்டத்தின் அடிப்படையில் ஏப்ரல் மாதத்தின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்கண்டு சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் பணமாக செலுத்தப்பட்ட வருமானவரி அளவு ரூபா 7,016,486 ஆக இருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 14,735,916 ஆக ரூபா 7,719,430 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் எங்களால் செலுத்தப்பட்ட வரி அளவு ரூபா 14,735,916 ஆக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டு திட்ட முறைமையின் கீழ் 2021 ஆம் ஆண்டின் இரண்டு காலாண்டுகளுக்காக ரூபா 7,016,486 செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மதிப்பீட்டு முறையின் கீழ் இரண்டு காலாண்டிற்கு செலுத்தப்படாது அதுவரை மதிப்பீட்டு அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட வரி அளவு காணப்பட்டமை மற்றும் அதற்கு முன்னைய ஆண்டில் இலாபங்கள் பெறப்பட்டமை என்பன காரணங்களாக இருந்தது. | பணமாக மேற்கொள்ளப் படுகின்ற செலவினங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திலிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் பணியகத்திற்கு செலுத்த வேண்டியாக முறையே ரூபா 4,698,378 மற்றும் ரூபா 1,513,857 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. பணியகத்தின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் முறையே ரூபா 3,267,161 மற்றும் ரூபா 27,360,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முறையே ரூபா 1,431,017 மற்றும் ரூபா 25,846,143 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திலிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பான தரப்பினர்கள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்காக தலைவரின் தலைமையில் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கலந்துரையாடல் தடவைகளின் இறுதியில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் பிரகாரம் அறவிடுதல், ஈடுசெய்தலோ அல்லது பதிவழித்தலோ மேற்கொள்ளப்படும். | இரு தரப்பினர்களும் இணக்கப்பாட்டிற்கு வந்து பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடனை அறவிடும் இயலுமையை பரீட்சிக்காமல் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,012,211 தொகை இழப்பீட்டு நட்டமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 51,096,767 தொகையான கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 16,762,257 ஆக இருந்ததுடன் 2022 மார்ச் 31 கணக்காய்வு திகதி வரையிலும் இந்த மீதியை அறவிடுவதறகு தவறியிருந்தது. | அரச நிறுவனம் அதிகளவில் பதில் கடிதம் அனுப்பாமையின் அடிப்படையில் இந்த மீதி தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டதுடன் காணப்படுகின்ற ஆவணங்களில் உள்ள நலிவுகளினால் அந்த பெற வேண்டிய மீதியை அதிக அளவில் கோரப்பட்ட போதிலும் கிடைத்திருக்கவில்லை. எனினும் இந்த மீதி பணிப்பாளர் சபை ஆலோசனையின் அடிப்படையில் பதிவழித்தல் தவிர ஏனைய மாற்றுவழி காணப்படாதிருந்தமையும் எழுந்திருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | முல்லைத்தீவு கிரவல் செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக | மீதியை விடுவிப்பதற்கு வாய்மொழி மூல விருப்பம் தெரிவித்திருந்த போதிலும் இதுவரையிலும் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முல்லைத்தீவு மாவட்ட வன உத்தியோகத்தருக்கு 2014 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 400,000 தொகை மீண்டும் வழங்குமாறு 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி கோரப்பட்ட போதும் அது வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (உ) | கம்பனியால் யான்ஓயா செயற்திட்டத்தில் மணல் அகழ்விற்காக 1423 கியூபிற்காக ரூபா 999,946 தொகை வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 974 மணல் கியூப்கள் மாத்திரம் அகழப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டிற்கு பின்னர் அமுல்படுத்தப்படாதிருந்த துடன் 449 மணல் கியூப்பிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 454,506 தொகையை மீண்டும் வழங்குமாறு 2021 திசெம்பர் 01 ஆந் திகதி அறிவிக்கப்பட்ட போதும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனமொன்றாக எங்களால் கோரப்பட்ட போதிலும் அவர்களின் நிறுவனத்தின் கொள்கை அடிப்படையில் கொடுப்பனவுகள் வசதியீனமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஊ) | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் மனிதவள தேவை மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொண்டு ஆலோசனையாளருக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 400,000 தொகை கம்பனியால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த தொகை இதுவரை பணியகத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே யான்ஓயா செயற்திட்ட அலுவலகத்தை போல் யான்ஓயா கட்டிடம் மற்றும் ஊழியர் தங்குமிடங்களுக்காக கம்பனியால் செலுத்தப்பட்ட ரூபா 150,000 தொகையும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திலிருந்து எங்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் பலவற்றின் போது உரிய சகல ஆவணங்களிலும் எழுத்து மூல அறிவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரையிலும் அதற்காக பதில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் இரு தரப்பினரும் பொதுவான உடன்படிக்கையில் வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) | 2010-2021 காலப்பகுதியில் கம்பனியால் பல்வேறு சேவைகளை வழங்கியதற்காக நிறுவன மற்றும் நபர்களினால் கம்பனிக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா | பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 41,161,688 முற்பண பெறுமதியில் 05 வருடங்களை விஞ்சிய முற்பணங்களின் பெறுமதி ரூபா 5,586,101 ஆகும். இந்த முற்பணம் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | 05 மணல் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்காக 2018 ஆம் ஆண்டில் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திற்கு செலுத்த வேண்டிய அரசிறை குறித்த காலத்தில் செலுத்தாமையினால் செலுத்த வேண்டிய ரூபா 1,513,857 தண்டப்பணம் மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தாய்க் கம்பனியால் அவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்ததுடன் அதனை அகற்றுவதற்காக எங்களால் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்காக இதுவரை சிறந்த பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இரு தரப்பினருக்கும் இடையே இணக்கப்பாட்டிற்கு வந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1.2 ஆம் பந்தி | கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம், நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்பு மற்றும் திட்டமிடப்பட்ட காலத்தில் அடையப்பட வேண்டிய நோக்க இலக்குகள் மற்றும் பொறுப்புக்கள் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுகின்ற காலப்பகுதியின் போது நிறுவனக் கட்டமைப்பு காணப்படாதிருந்ததுட ன் தற்போது நிறுவன கட்டமைப்பை தயாரிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் வகையில் உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 8.3.9 ஆம் பந்தி | கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் இரண்டு பேர் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதி முதல் சுற்றாடல் அமைச்சிற்கு | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் அமுல்படுத்தப்படுகின் ற செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நியமிக்கப்பட்டு ரூபா 283,240 தொகையான சம்பளம் மற்றும் படிகள் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. | திட்டங்களின் செயல்முன்னேற்றத்தை ஆராய்ந்து பார்க்கும் போது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக பொது மக்களின் அடிப்படையில் விரிவான ஊடாக விளம்பரமொன்றை வழங்குவதற்காக அமைச்சில் ஒன்றிணைந்த பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் ஊடக அலகை தாபிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் எமது கம்பனிக்கு உரியதாக மேற்கொள்ளப்படுகின்ற மேற்கூறப்பட்ட கடமை நடவடிக்கைகளுக்காக பொருத்தமான இரண்டு உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் நியமிக்குமாறு கோரப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கம்பனியின் அமைப்பு அகவிதி | | | |
| (i) | 12 ஆம் பிரிவு | இலங்கையில் ஏனைய இடங்களில் புதிய மற்றும் காணப்படுகின்ற கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில்களை நாளதுவரையாக்கி புவிச்சரிதவியல் தரவு மற்றும் தகவல்களை வழங்குவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கையிலோ அல்லது ஏனைய இடமொன்றிலோ அகழ்தல் மற்றும் கனிய கைத்தொழில்களுக்காக ஏதாவது உத்தியோகத்தர் ஒருவரினால் கோரப்படுகின்ற புவிச்சரிதவியல் ஆய்வு தரவு மற்றும் தகவல்களை வழங்குதல், அந்த | கம்பனி அமைப்பு அகவிதிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தரவுகள் படிவு ஆய்வு செயற்திட்டத்தில் காணப்படுகின்ற பணிப்பொறுப்பின் அடிப்படையில் சேவைப் பங்களிப்பாளர் களிடமிருந்து பணத்தை அறவிடுதல் வணிக ரீதியான செயற்திட்டமாக அமுல்படுத்தி உரிய தினம் வரை நாளதுவரையாக்கிய தகவல்களை வழங்கும் இயலுமை கம்பனிக்கு உரியதாகும். | |
| (ii) | 19 ஆம் பிரிவு | கனிப்பொருள் சார்ந்த மற்றும் ஏனைய சார்ந்த கைத்தொழில்களுக்காக முகாமைத்துவ மற்றும் எழுதுவினைஞர் சேவைகளை வழங்கும் நோக்காக இருந்த போதிலும் கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில்கள் இடம்பெறாத இலங்கையின் கனிப்பொருள் ஒழுங்குபடுத்துதல் நிறுவனமாக நடவடிக்கை எடுக்கின்ற புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திற்கு 55 ஊழியர்களை வழங்கி 10 சதவீத இலாபத்தை கம்பனி வைத்திருந்தது. | ஜீஎஸ்எம்பி தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியின் அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிறுவனத்தின் விருப்பத்தின் பிரகாரம் ஏனைய நிறுவனங்களுக்கு ஊழியர்களின் சேவை ஈடுபடுத்த முடியுமாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனி 10 சதவீத இலாபத்துடன் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் எழுத்து மூல கோரிக்கையின் அடிப்படையில் ஊழியர்கள் அந்த நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,509,597 இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் 43,290,584 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 54,800,181 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது இந்த அதிகரிப்பிற்கு மன்னம்பிட்டி, பெல்அத்த மற்றும் நிதன்வள மணல் செயற்திட்டங்களின் வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 127,138,489 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களுக்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,386,251 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுகை திட்டம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை கொள்வனவு செய்யாமை தொடர்பான தீர்மானம் அந்த ஆண்டின் இறுதி வரையிலும் எடுக்காமையின் காரணமாக பெறுகை திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பிரதான பெறுகைத் திட்டத்தில் நிரற்படுத்தப்பட வேண்டிய போதிலும் எமது நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மையின் பிரகாரம் அது வசதியீனமற்ற செயற்பாடாக இருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காலநிலை மாற்றங்களினால் நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 75 குளங்கள் பொறியியலாளர் அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 43,954,503 தொகையான ஒப்பந்தம் மீளாய்வாண்டில் விவசாய அமைச்சினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய சகல வேலைப் பகுதிகளினதும் கூறுவிலைகள் கோரப்படாமல் | கூறுவிலைகள் கோரும் நடைமுறைகளில் ஈடுபடுவதாயின் அதற்காக மாதம் ஒன்றிற்கு அண்மித்த காலம் செலவிட வேண்டியிருந்தமையால் மற்றும் கம்பனி விஞ்ஞாபனத்தின் பிரகாரம் ஒன்றிணைந்த செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்கு முடியுமாக இருந்தமையால் அதற்காக அத்துறைகளில் அனுபவமுடன் திறன் மற்றும் உபகரணங்களை | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் படி இன்னுமொரு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற தரப்பினர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடன் ஒன்றிணைந்த உடன்படிக்கை மூலம் இந்த செயற்திட்டத்திற்கு கேள்வி கோருவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவர்களுக்கு பொறியியல் அளவிடை ஆய்வு நடவடிக்கைகள் மாத்திரம் கையளிக்கப்பட்டதுடன் அதன் ஏனைய இலக்குகளான பங்கசு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பூரணமாக முடியுமாக இருந்தமை நிறுவனத்தின் புவிச்சரிதவியல் பிரிவிற்கு காணப்பட்டது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) மன்னம்பிட்டிய மணல் செயற்திட்டம்** | | |
| (i) மணலை குவித்தல் மற்றும் விநியோகித்தல் முறைமையொன்று தயாரிக்கப்பட்ட போதும் அதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் உள்ளக சுற்றறிக்கையாக விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்ட ஆலோசனையின் போது சிரேஷ்ட முகாமைத்துவத்தால் செயற்திட்டத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. | மணலை குவித்தல் மற்றும் விநியோகிக்கும் திட்ட முறைமை உள்ளக சுற்றறிக்கையாக விநியோகிக்கப்படல் வேண்டும். |
| (ii) மணல் மேடை நலனாளிகள் மற்றும் கம்பனிக்கிடையே மணல் கரையில் குவித்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட பல உடன்படிக்கை கம்பனிக்காக எந்தவொரு நபரும் கையொப்பமிடாமை சில உடன்படிக்கைகளுக்காக இரு தரப்பினரும் கையொப்பம் இட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த உடன்படிக்கைகளில் மாதாந்த அகழ்வு செய்து கையளிக்கப்பட வேண்டிய மணல் அகழ்வு குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | நாளதுவரையாக்கப்பட்ட உடன்படிக்கை யாவும் முகாமைத்துவத்தால் கையொப்பம் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கையை சட்டரீதியாக்கு வதற்கு உரிய பிரகாரம் பூர்த்தி செய்து உரிய தரப்பினர் கையொப்பம் இடப்படல் வேண்டும். |
| (iii) 1 கியூப் இற்காக 4,830 ஆக காணப்பட்ட மணல் விலை ரூபா 6,450 வரை ரூபா 1,620 இனால் அதிகரித்து அதில் ரூபா 1,000 மணல் தொகையில் கரையில் குவிக்கின்ற தொழிலாளர்களுக்காக செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை | இந்த செயற்திட்டத்திற்கு நேரடியாக தொழிலாளர்களை சேர்த்து செயற்திட்டத்தை நடாத்திச் செல்லும் போது அவர்களிடமிருந்து நிரந்தர சேவையை பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகள் காணப்பட்டது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் அந்த தொகையில் ரூபா 600 இற்கும் - ரூபா 800 இற்கும் இடையிலான தொகை மணல் குவிப்பவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பொலன்னறுவை மாவட்டத்திற்கு வெளியே காணப்படுகின்ற உயர் மணல் விலையை கட்டுப்படுத்துவதற்காக நுகர்வோர் சேவை அதிகார சபையுடன் இணைந்து கட்டுப்பாட்டு விலையொன்றை விதிப்பது தொடர்பில் கம்பனி கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் அவற்றுக்கு பிரதானமான காரணமாகும். அதனால் செயற்திட்டத்தை விட நிரந்தர அடிப்படையில் அமுல்படுத்துகின்ற 2008-2015 வரை காணப்பட்ட மணல் குவிக்கும் நலனாளிகளின் கீழ் இந்த மணலை குவிக்கும் செயற்பாடுகள் மீண்டும் செயற்படுத்துவதற்கு முகாமைத்தவம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் முன்னைய திட்ட முறைமை மணல் தூக்குபவர்கள் அவர்களுக்குரிய சம்பளம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக சகல கொடுப்பனவுகளும் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டதுடன் தொழிலாளர்களுக்கு சாதாரணமான நிலையான சம்பளமொன்று கிடைக்க வேண்டியிருந்ததுடன் மணல் குவிப்பவர்களுக்கு வழங்குகின்ற உட்கட்டமைப்பு வசதிகளின் செலவினங்களை மேவுகை செய்வதற்கும் பணமொன்று ஒதுக்க வேண்டியிருந்தமையால் இவ்வாறு மணல் குவிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளில் வேறுபாடுகள் காணப்பட்டன. |
| (iv) | இந்த மணல் செயற்திட்டத்திற்காக 211 மணல் அகழ்வுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் 211 மணல் தளங்கள் செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் 144 மணல் தளங்கள் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டது. 61 மணல் தளங்களுக்காக மணல் குவிப்பவர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவை செயற்படுத்தப்படாதிருந்த போதிலும் 06 மணல் தளங்களுக்காக மணல் அகழ்பவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் செயலிழந்துள்ள அனுமதிப் பத்திரங்களுக்குரிய மணல் மேடையாக இருந்தமையால் அவற்றை செயற்படு நிலையில் மீண்டும் மணல் படிந்துள்ளமையால் ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த துடன் தற்போது இந்த மணல் தளங்களில் மணல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. | மணல் தளங்களுக்காக மணல் மேடை நலனாளிகள் நியமிக்கப்பட்டு செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | இந்த செயற்திட்டத்தின் கீழ் அகழ்வு செய்யப்படுகின்ற மணல் அகழ்வில் 85 சதவீதம் டோக்கன் முறைமையின் கீழ் வழங்கப்படுவதுடன் டோக்கன் முறைமையின் கீழ் வழங்கப்படுகின்ற மணல் அகழ்வில் 60 சதவீதம் பொலன்னறுவை மாவட்டத்தில் பதிவு செய்துள்ள 03 கியூப் மற்றும் அதற்கு மேற்பட்ட லொறிகளுக்காகவும், 20 சதவீதம் பொலன்னறுவையில் பதிவு செய்துள்ள 03 கியூப்களுக்கு குறைவான லொறிகளுக்காகவும், 20 சதவீதம் மாவட்டத்திற்கு வெளியில் இருக்கின்ற லொறிகளுக்காகவும் வழங்கப்பட்டிருந்தது.<br>பொலன்னறுவை மாவட்டத்தில் பதிவு செய்துள்ள 03 கியூப்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட 749 லொறிகளுக்கு மணல் பெற்றுக்கொள்வதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் இந்த மணல் ஏற்றுவதற்கு வழங்கப்பட்ட லொறி வண்டிக்கு 16-21 நாட்களுக்கு இடையிலான காலம் எடுத்திருந்தது. அவ்வாறே பொலன்னறுவை மாவட்டத்திற்கு வெளியே 172 லொறிகளுக்கு மணல் பெற்றுக்கொள்வதற்கு பதிவு செய்திருந்ததுடன் அந்த லொறி வண்டிகளுக்காக ஒரு மணல் ஏற்றுதலின் பின்னர் மீண்டும் மணல் ஏற்றுவதற்கு 06 மாத காலம் எடுத்திருந்தது. | இறுதி நுகர்வோருக்கு நியாயமான விலையில் மணலை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் செயற்திட்டமொன்றாக இருந்ததுடன் இந்த அல்லது குழுவொன்றின் கீழ் செயற்திட்டத்தில் பதிவு செய்துள்ள லொறி வண்டிகளின் மணல் ஏற்றுகின்ற தடவைகளின் எண்ணிக்கை தொடர்பாக நிறுவனம் கடப்பாடாக இருக்கவில்லை. இதில் குறிப்பிடப்பட்ட காலவீச்சில் டோக்கன் முறையின் கீழ் மணல் பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்படுகின்ற காலவீச்சாக இருந்ததுடன் அதில் அநேகமான லொறி வண்டிகள் நிறுவனத்தால் கட்டுப்பாட்டு விலையின் கீழ் விநியோகிக்கப்பட்ட மணல் வசதிகளுக்கான பங்களிப்பு இந்த தடவை எண்ணிக்கையை விட மணல் ஏற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நியாயமான அடிப்படையில் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (vi) | மன்னம்பிட்டி பாலத்திற்கு மேற்பிரதேசத்தில் ஆண்டில் 06-07 மாதங்களுக்கு இடையிலான காலத்தில் ஆற்று நீர் மட்டம் குறைவடைகின்ற சந்தர்ப்பங்களில் ஆற்றின் நடுவே வைக்கப்பட்டுள்ள குவிந்துள்ள கணிசமான மணல் படிவுகளை படகுகளில் இருந்து ஏற்றுவதற்கு முடியாமையினால் அந்த மணல்களை அகற்றுவதற்கு வசதியீனமாக இருந்ததாக மணல் தள உரிமையாளர்களின் சங்கத்தினால் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மணல் படிவுகளை அகற்றுவதறகாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பின்னாய்வு குழுவின் அறிக்கையின் பிரகாரம் Convey Belt முறையினை | மன்னம்பிட்டி தேசிய பூங்காவில் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு சட்டரீதியான இயலுமைக்கான பின்புலம் மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் சகல அகழ்வு நடவடிக்கைகளும் அகழ்வாளர்களின் அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | மணலை அகற்றுவதற்காக பொருத்தமான செயல் முறையொன்று பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துதல் பொருத்தமாக இருந்ததாக பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (vii) | மணல் வெளியில் கொண்டு குவிக்கின்ற தொழிலாளர்களுக்காக மணல் நலனாளிகளினால் காப்புறுதியொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ‘‘பூலதிசி ரன் தகடிய என்ற’’ பெயரில் நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் பிரகாரம் உயிருக்கு ஆபத்தான காப்புறுதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | காப்புறுதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | கம்பனியின் மணல் தளத்திற்காக 10 சதவீதமும் பிரதான அலுவலகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 05 சதவீதமும் மணல் வழங்க வேண்டியிருந்த போதிலும் குறித்துரைத்த அளவினை விட 50-75 சதவீதத்திற்கு இடையிலான அதிக அளவில் மணல் தளத்திற்கும் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் மணல் விநியோகிக்கப்பட்டிருந்துது. | மணல் விநியோகிக்கும் திட்ட முறைமையின் கீழ் குறித்துரைத்த சதவீதத்தை பிரித்து ஒதுக்குதல் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த சதவீதம் மாற்றப்பட்டமையுடன் மணல் விநியோகிக்கும் செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமான மணல் விலையை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படுகின்ற படிமுறையாக இருந்ததுடன் டோக்கன் முறைமையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற மணல் இறுதி நுகர்வுக்கு வழங்கும் போது அந்த விலை கட்டுப்பாடு நிறுவனத்திற்குச் சொந்தமாக காணப்படவில்லை. | குறித்துரைத்த முறைமை ஒன்றுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) | ஆற்றுக் கரை மற்றும் மணல் அகழ்வு வழிகளை புனரமைப்புச் செய்வதற்காக 01 கியூப்பிலிருந்து அறவிடப்படுகின்ற ரூபா 40 கட்டணம் ரூபா 100 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் 2021 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,782,443 தொகை சேர்க்கப்பட்டிருந்த போதிலும் உரிய காலத்தில் ரூபா 100,100 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மணல் அகழ்வு நிலத்திற்கு நுழையும் வீதி மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்ட போதும் அந்த வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புனரமைப்பு நிதியத்தின் கீழ் வீதியை புனரமைப்பதற்கு கேள்வி கோருவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 6 மில்லியனுக்கு அண்மித்ததாக உள்ளது. | சேகரிக்கப்படுகின்ற பணம் உரிய பணிகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (x) | இந்த செயற்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 8,883,520 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட லோடர் இயந்திரம் தொழில்நுட்ப கோளாறின் காரணமாக 2012 ஆம் ஆண்டில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அது மீண்டும் ரூபா 966,595 செலவில் பழுதுபார்க்கப்பட்ட போதும் அதனை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாதிருந்தது. இந்த இயந்திரம் செயற்திட்ட வளவில் பாதுகாப்பின்றி தரித்து வைக்கப்பட்டமையால் அதன் பகுதிகளில் துருப்பிடித்திருந்ததுடன் ரூபா 2,423,224 பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் எந்தவொரு மேவுகையும் இன்றி மழைநீர் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து உடைந்த நிலையில் காணப்பட்டது. | இவ்வாறான இயந்திரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற இழப்புக்கள் மற்றும் துருப்பிடித்தல்கள் மூலம் இயந்திரத்தின் செயற்படு நிலைக்கு பாதிப்பொன்று ஏற்படுவதில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியிருந்த துடன் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கந்தளாய் மணல் செயற்திட்டம் | | |
| (i) | இந்த செயற்திட்டத்தின் கீழ் அகழப்பட்டு மணல் களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப்பட்ட 46,306 மணல் கியூப்களின் அளவில் 41,773 மணல் கியூப்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி மணல் விற்பனை செய்யப்படாமல் 10 மாத அளவிலான காலம் காணப்பட்டமையால் சிறிய அளவில் சேற்றுமண் கலந்திருந்ததுடன் மிகுதி 4,533 கியூப் அளவு விற்பனை செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. இந்த இடத்தில் 1,000 மணல் கியூப்களுக்கான அளவு மாத்திரம் காணப்படுவதாக கேள்விதாரர்களினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 875 மணல் கியூப்கள் அளவு கேள்விதாரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 3,658 மணல் கியூப்களின் மணல் பற்றாக்குறை காணப்பட்டதுடன் அந்த மணல் இருப்பின் கிரயம் ரூபா 12,107,980 ஆகும். | ஒப்பந்தகாரரால் உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் களிமண் கலந்த மணலை விற்பனை செய்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் அதனை கழுவி விற்பனை செய்ய வேண்டிய மணல் மிகுதியாக்கப்பட்டு இடையில் உள்ள களிமண் கலவை மணல் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதனால் நிலத்தில் உள்ளடங்கியிருந்த சகல மணலும் பெற்றுக் கொள்ளப்படாமையின் காரணமாக ஒப்பந்தகாரரால் பாதுகாப்பு வைப்பை விடுவிப்பதற்கு முடியாமையினால் நிறுவனத்தினால் விடுவிக்காமல் இருப்பதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கழுவுவதற்கு உள்ள மணலின் ஒரு பகுதி அந்த நிலத்தில் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சேகரிப்பதற்கும் உள்ளது. | முறையான திட்ட முறைமை யொன்றை பின்பற்றி குறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கொள்வனவு செய்த வாடிக்கையாளர் சிறு அளவில் களிமண் கலந்துள்ள மணல் செயற்திட்டத்தினை நிலத்திலிருந்து | வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் செயற்திட்டம் செயற்பாடின்றி காணப்பட்டமையால் மாதாந்தம் | கம்பனி இலாபத்தை உழைக்கும் மாற்றுவழியை இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களை ஈடுபடுத்தி சுத்திகரித்து 01 கியூப் ரூபா 10,000 வீதம் விற்பனை செய்யதமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வெளித்தரப்பினர் ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட இலாபத்தை உழைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | செலவிடுவதற்கு ஏற்படுகின்ற செயற்பாட்டு செலவினங்களை நிறுத்துவதற்கு சேறு கலந்த மணலை விற்பனை செய்வதற்கு தேவையாக இருந்தது. 05 ஏக்கர் முழுவதும் நிலத்தில் இந்த மணல் கலந்திருந்ததுடன் அந்த மணலை சேகரித்து கழுவி விற்பனை செய்வதற்கு இருந்தது. இதனால் கொள்வனவாளர்களுக்கு அந்த நிலத்தில் உள்ள மணலை கழுவி விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் கொள்வனவாளரால் அந்த சேறு கலந்த அளவு மாத்திரம் நில மட்டத்தில் மணல் படையை மிகுதியாக்கி ஏற்றப்பட்டமையால் நிறுத்தி வைக்கப்பட்ட பிணை முறி விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | இலாபத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மணலை அகற்றுவதற்கு ஒத்ததாக 03 வெள்ளநீர் பாதுகாப்பு அணைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 59,978,547 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையை பயன்படுத்தி இலக்கம் 01, 02 மற்றும் 03 என்ற தடுப்பு சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் நிர்மாண செயல்முன்னேற்றம் முறையே 100, 69 மற்றும் 53 சதவீதமாக இருந்தது. | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்குகின்றோம். | 02, 03 தடுக்கும் சுவர்கள் விரைவாக நிர்மாணித்து பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மூதூர் மணல் செயற்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தில் காணப்படுகின்ற மணல் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கொங்கிறீட் இற்காக தகுதியான நிலைமையில் இல்லாமையின் காரணமாக இந்த இடத்தில் மண் அகழ்வு செய்யப்பட்டு உரிய நிர்மாணத்திற்காக வழங்குவதற்கு பாதுகாப்பு இராணுவ தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. கம்பனியால் 24 அகழ்வு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டு இந்த இடத்தில் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்தில் 1,397 மணல் கியூப்கள் | வன பாதுகாப்பு திணைக்களத்தின் பரிந்துரை கிடைத்தவுடன் அகழ்வு அனுமதிப் பத்திரத்திற்காக 2020 மார்ச் மாதத்தின் போது புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்திற்கு விநியோகிக்கப்பட்ட அந்த அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு அதில் 05 மாதங்கள் கடந்திருந்த 2020 ஆகஸ்ட் மாதத்தில் ஆகும். அதன் பின்னர் பிரதேசத்தில் மழையின் காரணமாக கைச்சாத்திடப்பட்டமையால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு வசதியீனமாக இருந்தது. அதன் பிரகாரம் இந்த மணல் கியூப் மாத்திரம் அகழ்வதற்கு முடியுமாக இருந்தது. | செயற்திட்டத்தை இலாபம் பெறுகின்ற நிலைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அகழப்பட்டிருந்ததுடன் உரிய காலத்தில் ரூபா 1,910,661 நட்டம் பெறப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட வெல்லவாய கொட்டிகம்பொக்க பளிங்கு செயற்திட்டம் மீளாய்வாண்டிலும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் அகழப்படுகின்ற பளிங்குகளை களஞ்சியப்படுத்துவதற்காக காணியொன்றை வாடகைக்கு பெறல், அகழப்படுகின்ற பளிங்குகளின் பாரத்தை நிறுப்பதற்கான பால தராசு கொள்வனவு செய்தல் மற்றும் அதன் பாதுகாப்பிற்காக ஊழியர்களை ஈடுபடுத்தலை உள்ளடக்கிய நடைமுறை மற்றும் மூலதன செலவினமாக ரூபா 21,712,327 தொகை 2017-2021 காலத்தில் செலவிடப்பட்டிருந்தது. | 2016 மே 10 ஆந் திகதி அமைச்சு செயலாளரின் எழுத்துமூல ஆலோசனையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட பளிங்கு படிவுகளை அகழ்ந்து விற்பனை செய்வதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையான சகல நிறுவனங்களினதும் அங்கீகாரத்துடன் 2021 ஒக்தோபர் 13 ஆந் திகதி செல்லுபடியாகும் வகையில் தொழில்நுட்ப அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஆகக்குறைந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த செயற்திட்டத்திற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவிற்கு அந்த பெறுகைகளுக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் முதலாவது குழுக் கூட்டம் 2022 மே 02 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சில் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பித்தல் வேண்டும். |
| (உ) | 01 கியூப் இலிருந்து ரூபா 50 வீதம் தொழிலாளர் நலன்புரிக்காக அறவிடப்பட்ட ரூபா 5,616,811 தொகை நலன்புரிகளுக்காக செலவிடப்படாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனியின் வருமானத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. | புனரமைப்பதற்கான அல்லது நலன்புரி நோக்காகக் கொண்டு சேகரிக்கப்படும் அல்லது சேகரிக்கப்பட்ட பணம் தேவையான சந்தர்ப்பங்களின் போது செலவிடுதல் மேற்கூறப்பட்ட பிரகாரம் சுற்றறிக்கை மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த சேகரிக்கப்பட்ட பணம் கட்டாயமாக செலவிடப்பட வேண்டியவை எவை என நிபந்தனையில் காணப்படவில்லை. | குறித்துரைத்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட நிதியம் அந்த குறித்த நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2001 யூன் 08 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது கம்பனியின் பதவியணியினர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை உள்ளடக்கிய 5-6 பேர்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்கு தேவையான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட வேண்டுமென அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 240 பேர்களையுடைய ஊழியர் தரப்பினர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் நிரந்தர பதவியணியினர் 64 வரை அதிகரித்துக் கொள்வதற்கு கம்பனியின் மூலம் வரைவு அமைச்சரவை பத்திரத்தினை தயாரித்து 2021 சனவரி 21 ஆந் திகதி வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அமைச்சிலிருந்து அங்கீகாரம் கிடைத்தவுடன் பொதுமுயற்சிகள் செயற்பாட்டு கைநூலில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் நிறுனத்தின் நிறுவகக் கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறைக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |